www.Padasalai.Net www.CBSEtips.in

10 - ஆம் வகுப்பு **காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022** பதிவு எண்.

காலம் : 2.30 மணி நாமக்கல் **தமிழ்** மாவட்டம் மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது. 2) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** 15 X 1 = 15

1. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
2. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
   அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
   இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
3. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .......... .
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள், ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல், நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை, நிலங்கள்
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
5. அருந்துணை என்பதைப் பிரித்தால் ............. என வரும்
   அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை
6. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ...... . அ) எழுவாய் ஆ) உவம உருபு இ) வேற்றுமை உருபு ஈ) உரிச் சொல்
7. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
   நச்சு மரம்பழுத் தற்று - ***இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ............ .***
   அ) உருவக அணி ஆ) உவமையணி இ) எடுத்துக்காட்டு உவமையணி ஈ) தற்குறிப்பேற்ற அணி
8. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**
   அ) கொண்டல் - 1) மேற்கு
   ஆ) கோடை - 2) தெற்கு
   இ) வாடை - 3) கிழக்கு
   ஈ) தென்றல் - 4) வடக்கு
   அ) 1, 2, 4, 3, ஆ) 4, 2, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 4, 1, 2
9. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ......... .
   அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்த
10. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?
    அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
    ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
    இ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இடமுண்டு இலைக்கு
    ஈ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
11. 'சந்தக் கவிமணி' என அழைக்கப்படுபவர் ......... .
    அ) சண்முக சுந்தரம் ஆ) சுப்பிரமணியன் இ) துரை. மாணிக்கம் ஈ) க.சச்சிதானந்தன்

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.***

"விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருஅறி வாரா ஒன்றன் ஊழியும் ;
உந்துவளி கிளர்ந்த ஊழிஊழ் ஊழியும்"

தமிழினி தமிழ் உரை
9488907937

12. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகையைக் குறிப்பிடுக.
    அ) விசும்பில், கருவளர் ஆ) உருஅறி, உந்து வளி இ) கருவர், உரு அறி ஈ) உந்துவளி, ஊழிஊழ்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) கீரந்தையார் ஆ) நப்பூதனார் இ) குலசேகராழ்வார் ஈ) பெருங்கௌசிகனார்
14. 'விசும்பு' என்பதன் பொருள் ……….
அ) நெருப்பு ஆ) காற்று இ) நிலம் ஈ) வானம்
15. 'ஊழ்ஊழ்' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) விளித்தொடர் ஆ) அடுக்குத் தொடர் இ) எழுவாய்த் தொடர் ஈ) வினைமுற்றுத் தொடர்

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18) (பிரிவு - 1)**

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண். 21 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4 X 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலத்திற்குரிய முதற்பொருள்கள் ஆகும்
ஆ) கிழக்கிலிருந்து வீசும் காற்றை கொண்டல் என்பர்.
17. இறடிப் பொம்மல் பெருகுவீர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
18. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
19. வசன கவிதை - குறிப்பு வரைக,
20. மொழிபெயர்ப்பு பற்றி மணவை முஸ்தபா கூறுவது யாது?
21. 'கண்' என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 X 2 = 10

22. 'கொடுப்பதூஉம் துய்ப்பதூம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்' - ***இக்குறட்பாவில் பயின்று வரும் அளபெடைகளை எடுத்தெழுதுக.***
23. **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
மலை - மாலை
24. ***கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.***
அ) உழவர்கள் மலையில் உழுதனர்
ஆ) முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
25. 'வருக' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
26. **கலைச் சொற்கள் தருக.**
அ) Conversation ஆ) Space Technology
27. ***தொடர்களை அடைப்புக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.***
அ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். ***(கலவைத் தொடராக மாற்றுக).***
ஆ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. ***(தனிச் சொற்றொடராக மாற்றுக)***
28. ***சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.***
தேன், விளக்கு, மழை, விண், மணி விலங்கு, வான், பூ, மேகலை, செய், பொன்.

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1** 2 X 3 = 6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இது போல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
நான் மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது.
என்னுடைய மேலடுக்கில் உள்ள ஓசோன் படலத்தின் மூலம் கதிரவனிடமிருந்து வெளிவரும் புற ஊதாக்கதிர்களைத் தடுக்கும் அரணாக விளங்குகின்றேன். புவியை ஒரு போர்வை போலச் சுற்றிக் கிடந்து பரிதியின் கதிர்சூட்டைக் குறைத்துக் கொடுக்கின்றேன். உங்கள் வசதிக்காக என்னை வைத்து குளோரோ புளோரா கார்பன் என்னும் நச்சுக்காற்றை வெளிவிடும் இயந்திரங்களான குளிர்பதனப் பெட்டி முதலானவற்றை உருவாக்கியிருக்கிறீர்கள்.
அ) 'நான் மாசுபடுவதால்' என்ற தொடரில் 'நான்' என்பது இங்கு எதனைக் குறிக்கிறது?
ஆ) ஓசோன் படலத்தின் பணி யாது?
இ) குளிர்பதனப் பெட்டி வெளியிடும் நச்சு வாயுவின் பெயர் என்ன?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண். 34 க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33. 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.** அ) "அருளைப் பெருக்கி" எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல். ***(அல்லது)***
ஆ) "சிறுதாம்பு தொடுத்த" – எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**

35. "வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு". – ***இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.***

36. "ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு". – ***இப்பாடல் அடிகளில் அமைந்துள்ள பொருள்களின் வகையைச் சுட்டி***

37. தோட்டத்தில் மல்லிகைப் பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.


## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்ந்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. *(அ*
முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / கவிதை / சிறுகதை ந
மதிப்புரை எழுதுக. ***(அல்லது)*** ஆ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலை
கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



---

### நூலக உறுப்பினர் படிவம்

.................................................... மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ....................................................

அட்டை எண். **உறுப்பினர் சேர்க்கை அட்டை** உறுப்பினர் எண்

1. பெயர் ....................................................
2. தந்தை பெயர் ....................................................
3. பிறந்த தேதி ....................................................
4. வயது ....................................................
5. படிப்பு ....................................................
6. தொலைபேசி எண். ....................................................
7. முகவரி ....................................................
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ....................................................

நான் .................................... நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் கா
ரூ. ................................., சந்தா தொகை ரூ. ........................ ஆக மொத்தம் ரூ. ...................
செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : தங்கள் உண்ம

திரு / திருமதி / செல்வி / செல்வன் ........................................ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம் (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி / தலைமை
சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி/ மாநகராட்சி/ ஒன்றிய /பேரூராட்சி உறுப்பின

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

41. விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் கதவு எண். 32/1, காந்தி வீதியில் வசிக்கும் சீனிவாசன் என்பாரின் மகன் ஜெய்சங்கர் (15 வயது) என்பார் மாவட்ட மைய நூலகத்தில் சேர்வதற்காக நூறு ரூபாயைத் தன் தந்தையிடம் கேட்டுப் பெற்றுச் செல்கிறார். கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக.

42. அ) பள்ளியிலும், வீட்டிலும் நீ கடைப்பிடிக்கக் கூடிய நற்பண்புகளைப் பட்டியலிடுக. ***(அல்லது)***

**ஆ) மொழிபெயர்க்க.**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam Literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Sri Lanka, Malaysia, Singapore, England and world wide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** $3 \times 8 = 24$

43. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. ***(அல்லது)***

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் ‘செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்’ பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. ***(அல்லது)***

ஆ) கல்வியின் அவசியம் குறித்துக் கூறும் புதிய நம்பிக்கை கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. ***(அல்லது)***

**ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.**

முன்னுரை - முயற்சி - முயற்சியின் பெருமை - முயற்றின்மையால் வரும் இழிவு - ஊழையும் வெல்லும் முயற்சி முடிவுரை.

தமிழினி தமிழ் உரை
9488907937

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# தமிழினி தமிழ் உரை

## 10-ஆம் வகுப்பு - நாமக்கல் மாவட்டம் - காலாண்டு தேர்வு வினாவிடை - 2022

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15**

1. ஆ. இறைவனிடம் குலசேகராழ்வார்
2. ஆ. கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
3. இ. குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
4. ஈ. இலா
5. அ. அருமை + துணை
6. இ. வேற்றுமை உருபு
7. ஆ. உவமையணி
8. இ. 3,1,4,2
9. அ. சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
10. ஈ. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
11. அ. சண்முக சுந்தரம்
12. இ. கருவர், உருஅறி
13. அ. கீரந்தையார்
14. ஈ. வானம்
15. ஆ. அடுக்குத் தொடர்

பகுதி -II (மதிப்பெண்கள்: 18)

**பிரிவு-1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4 x 2 = 8**
**(வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

**16. விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ. முல்லை நிலத்திற்குரிய முதற்பொருள் யாது?
ஆ. கிழக்கிலிருந்து வீசும் காற்றை என்ன என்று கூறுவர்?

17. 'தினைச் சோற்றை உணவாக பெறுகுவீர்" என்பதே இதன் பொருள் ஆகும்.

18. வினா ஆறு வகைப்படும். ஆவை

| | | |
|---|---|---|
| அறி வினா | அறியா வினா | ஐய வினா |
| கொடை வினா | கொளல் வினா | ஏவல் வினா |

19. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.

20. "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவதே மொழிபெயர்ப்பு" என்று மணவை முஸ்தபா கூறுகிறார்.

21. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னா
கண்ணோட்டம் இல்லாத கண்.

**பிரிவு-2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10**

22. அளபெடை: இன்னிசை இளபெடை
செய்யுளின் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

23. மலையில் உள்ள பூக்களைக் கொண்டு
மாலை தொடுத்தேன்.

24. அ. உழவர்கள் வயலில் உழுதனர்.
ஆ. முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே ஆயர்கள் காட்டிற்குச் சென்றனர்.

25. பகுபத உறுப்பிலக்கனம்

| | | |
|---|---|---|
| வருக | - | வா (வரு) + க |
| வா | - | பகுதி (வரு எனத் திரிந்தது விகாரம்) |
| க | - | வியற்கோள் வினைமுற்று விகுதி |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

26. கலைச்சொல்

அ. உரையாடல் ஆ. விண்வெளித் தொழில்நுட்பம்

27. அ. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

ஆ. ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென்று நின்றது. ஆறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

**28. புதிய சொற்களை உருவாக்குக.**

தேன்மழை வான்மழை பூ விலங்கு மணி மேகலை

**பகுதி - III (மதிப்பெண்கள்: 18)**

**பிரிவு-1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**

29.

- தோப்பில் தென்னம்பிள்ளை நட்டேன்.
- மாங்கன்று வேகமான வளர்ந்தது.
- வயலில் நெல்லின் பைங்கூழ் நன்றாக வளர்ந்தது.
- தோட்டத்தில் கத்தரிநாற்று நட்டேன்.
- சாலை ஓரத்தில் பனைவடலி நன்கு வளர்ந்தது.

30.

- இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்தவில்லை.
- மனிதனுக்குரிய தேவைகளை மட்டுமே மேம்படுத்தி இருக்கிறது.
- மனித நேயம், அன்பு, இரக்கம் ஆகியவை இன்றி மனிதன் இயந்திரம் போல ஓடிக் கொண்டே இருக்கிறான்.
- அறிவியலால் இன்று மனிதன் மனிதனாக வாழவில்லை.

**31.**

- அ. காற்று
- ஆ. கதிரவனிடமிருந்து வெளிவரும் புற ஊதாக்கதிர்களைத் தடுக்கும்.
- குளோரோ புளோரா கார்பன்

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6**

**(வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32.

| தமிழ் | கடல் |
| --- | --- |
| • தமிழின்இயல், இசை நாடகம் என்பதைக் குறிக்கிறது.<br>• முதல், இடை, கடை என முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.<br>• காப்பியங்களை அணிகலன்களாக பெற்றது.<br>• சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது. | குடல் முத்தின் அமிழ்ந்து எடுத்தலைக் குறிக்கிறது.<br>வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய சங்குகளைத் தருகிறது.<br>வணிகக் கப்பல்கள் செல்லும் படி இருக்கிறது.<br>சங்கினைத் தடுத்து நிறுத்துகிறது. |

33.

- உவமை - மாளாத காதல் நோயாளன் போல்
- உவம உருபு - போல்
- உவமை சுட்டும் செய்தி

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். அதுபோல இறைவன் நீங்காத துன்பம் தந்தாலும் இறைவனின் அருளையே எதிர்பார்த்து வாழ்வதாக குலசேகராழ்வார் வேண்டுகிறார்.

34. அ. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

ஆ. சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

## பிரிவு-3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6**

35. அணி விளக்கம்:

ஒரு செய்யுளில் உவமானம், உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிக்படையாக வந்தால் அது உவமை அணியாகும்.

எ.கா.

வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

விளக்கம்:

ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் வரிவிதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

36.

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோளாகும்.

எ.கா.

ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு.

மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொரத்தமற்றதாகிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை ___ என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

.

37.

| | |
|---|---|
| பூங்கொடி | அன்மொழித்தொகை (பூங்கொடியாகிய பெண்) |
| மல்லிகைப் பூ | இருபெயரொட்டு பண்புத்தொகை (மல்லிகை - சிறப்புப் பெயர், பூ -பொதுப்பெயர்) |
| ஆடுமாடுகளுக்கு | உம்மைத்தொகை (ஆடுகளும் மாடுகளும் என்ற இரு சொற்களுக்கு இடையில் உம் மறைந்து வந்துள்ளது) |
| தண்ணீர்த் தொட்டியில் | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை (தண்ணீரை (ை) உடைய தொட்டி) |
| குடிநீர் | வினைத்தாகை (குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர் என மூன்று காலங்களும் மறைந்து வந்துள்ளது) |
| குடிநீர் நிரப்பினாள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| மணி பார்த்தாள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| வரும் வழி | வினைத்தொகை ( வந்த வழி, வருகின்ற வழி, வரும் வழி என மூன்று காலங்களும் மறைந்து வந்துள்ளது. |
| சுவர்க்கடிகாரம் | இருபெயரொட்டு பண்புத்தொகை (சுவர்-சிறப்புப் பெயர், கடிகாரம்-பொதுப்பெயர்) |

**பகுதி - IV & V**

பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.

**தமிழினி தமிழ் உரை**



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593